**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S. No. 26 / 2026**

**2026ம் வருடம் ஜூலை மாதம் 28ம் நாள் செவ்வாய்க்கிழமை**

**வா.சா.1** சாட்சியின் வாக்குமூலம் பிரமாணச்சட்டம் 1969, பிரிவு 6(1)ன்படி கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் திரு. வீரக்குமார் என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பொரோஸ் சர்ஜின் | த/பெ | எலியாஸ் |
| ஊர் | | வட்டம் | |
| சாதி | | சமயம் | |
| வயது | | தொழில் | |

**முதல் விசாரணை:–**

நான் இந்த வழக்கின் வாதி வங்கியின் முதுநிலை மேலாளர் ஆவேன். எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். என்னுடைய தகவலின் பேரில் தான் தயாரிக்கப்பட்டது. எனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. கடன் விண்ணப்பம் அசல் வா.சா.ஆ.1
2. அனுமதி கடிதம் அசல் வா.சா.ஆ.2
3. கடன் ஒப்பந்தம் அசல் வா.சா.ஆ.3
4. வங்கி கணக்கு பட்டியல் உண்மை நகல் வா.சா.ஆ.4
5. மேலாளர் சான்று அசல் வா.சா.ஆ.5

பிரதிவாதி தரப்பு வழக்குரைஞர் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி

**மானாமதுரை**